[23rd August 1960

Sri S. M. ANNAMALAI : மிகவும் பின்தங்கிய பிரதேசமாகிய ஜவ்வாது மலை போன்ற இடங்களுக்கு 'அன்ரெம்யூனரேடிவ் ஸ்கீம்' என்று சொல்லி மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. சமுதாய நலத் திட்டம் ஆரம்பித்து ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகியும் அப்படிப்பட்ட இடங்களுக்கு மின்சார இணைப்பு தரப்படாமல் 'அன்ரெம்யூனரேடிவ் ஸ்கீம்' என்று சொல்லி விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு சர்க்கார் மான்யம் தந்தாவது மின்சார இணைப்பு கொடுத்து உதவ முன்வருவார்களா?

The Hon. Sri V. RAMAIAH : இன்று நடைமுறையில் இருக்கக்கூடிய விதிகளின்படி எங்கெங்கே ஸ்கீம் ரெம்யூனரேடிவாக இருக்கிறதோ அங்கெல்லாம் இதுவரைக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் ஏற்படக்கூடிய பல சிக்கல்களை ஆராய்ந்து பார்த்து அவைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் சமீப காலத்தில் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. குறிப்பாக மிகவும் பிற்போக்கான பகுதிகளில் மின்சார இணைப்பு கொடுப்பதுபற்றி சமீப காலத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு ஆங்காங்கே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

Utilization of man-power

*** 385 *Q.*—Sri P. G. MANICKAM :** கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பகுதிகளில் விருதாவாக இருக்கும் ஆள் பலத்தைப் பயன்படுத்த திட்டக் கமிஷன் தெரிவித்துள்ள யோசனைகள் சம்பந்தமாக திட்டம் வகுப்பதற்காக சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி தன் அறிக்கையை சர்க்காருக்கு சமர்ப்பித்தாகி விட்டதா?

(ஆ) அப்படியாயின், அதன் நகல் ஒன்று சட்ட சபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) The Report of the Committee has not yet been finalised.

Sri P. G. MANICKAM : கிராமப் பகுதிகளில் முக்கியமாக விவசாயத் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வருஷத்தில் 4 மாதங்கள்தான் வேலை கிடைக்கிறது, 8 மாதங்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேலை இல்லாமல் சும்மா இருக்கும்பொழுது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதெல்லாம்தான் பரிசீலனையில் இருக்கிறது.

23rd August 1960]

MR. SPEAKER : கேள்வியைக் கேட்ட கனம் அங்கத்தினர் சபையில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சபையின் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

Breeding of cattle

* 386 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received any representation from the people of Hosur and Krishnagiri taluks that their breeding of cattle was greatly affected on account of Forest Department having taken over most of their grazing fields; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Representations were received by the District Forest Officer, Salem North, in general from the villagers in almost all places where estates and panchayat forests were taken over by the Forest Department expressing their difficulties in grazing their cattle. The petitioners were informed by the District Forest Officer, Salem North, that all the estates and panchayat forests taken over by the Forest Department are open to grazing for all animals except goats, after taking necessary grazing permits from the Forest Department. The villagers who have taken out permits are being allowed to graze their cattle.

Caste names

* 387 Q.—SRI A. A. RASHEED
SRI A. VEDARATHNAM
SRI V. K. KOTHANDARAMAN
SRI S. M. ANNAMALAI
SRI P. G. MANICKAM
} Will the Hon the Chief Minister be pleased to state—

(a) whether any directive has been received from the Union Government to delete references to caste or sect in registers or forms used for purposes of admission to educational institutions or recruitment to services and in other official documents; and

(b) if so, the steps taken by the Government to give effect to it?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) A communication has been received from the Government of India.

(b) It is under consideration of the State Government.

SRI A. A. RASHEED : May I know whether the Government of India have sent any reply and if so, what is the nature of the reply sent?

THE HON. SRI C. SUBRAMANIAM : The reply is that the matter is under the consideration of the State Government.

SRI A. VEDARATHNAM : கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களுடைய ஜாதிப் பெயரைக் குறிப்பிடவேண்டிய அவசியம்